Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 192/2021** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosection – **PW3** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | கமலகண்ணன் |
| Father/Husband Name | : | இராமகிருஷ்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.03.2024

<u>(எதிரிகள் 1 ஆஜர், 2ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)</u>

முதல் விசாரணை–

நான் தற்போது பாம்பன் காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.11.2019ம் தேதி மண்டபம் காவல்நிலையத்தில் காவலராக பணியில் இருந்தபோது மாலை 06.00 மணியளவில் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்படி 2ம் எதிரி அருண் என்ற முரளிதரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி 1ம் எதிரி ஷா என்ற அகமது கபீர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவினாசி பஸ்ஸ்டாண்ட் அருகில் சாய்ராம் பார்க்கிங்–ல்

இருசக்கர வாகனம் இருப்பதாக சொன்னார். எங்கள் முன்பு அவினாசி பஸ் நிலையத்திற்கு அருகில் 1ம் எதிரியிடம் ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். அதில் நானும், காவலர் ஜெயக்குமாரும் கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.1** கணக்கன் பாளையத்தை சேர்ந்த தேவி என்பவரின் வீட்டில் வாடகைக்கு தங்கி இருப்பதாக தெரியவந்ததன் பேரில் 1ம் எதிரியை அந்த வீட்டில் கைது செய்தோம். அவரிடமிருந்து ஒரு பிரிண்டரை அத்தாட்சியின் மூலம் ஆய்வாளர் எங்கள் முன்பு கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் காவலர் ஜெயக்குமார் என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் நிலையம் கொண்டு வந்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1ம் எதிரியை கைது செய்ய எந்த தேதியில் எந்த வாகனத்தில் யார் யார் சென்றோம் என்றால் காவல் ஆய்வாளர், காவலர் ஜெயக்குமார், கமலக்கண்ணன் மற்றும் நானும் காவல் ஆய்வாளரின் வாகனத்தில் சென்றோம். நாங்கள் போகும்போது காவலர் சீருடையில் தான் சென்றோம். ஸ்ரீசாய்ராம் பார்க்கிங் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி தான். அந்த இடத்தில் வைத்து தான் 2ம் எதிரியிடம் இருசக்கர வாகனம் கைப்பற்றப்பட்டது. இவ்வழக்கில் சம்பவ சாட்சியாக பொதுமக்கள் யாரும் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். ஸ்ரீசாய்ராம் பார்க்கிங்கில் இருந்து 1ம் எதிரி குடியிருந்த வீடு எவ்வளவு தூரம் என்றால் 1 மணி நேர பயணத்தில் சென்றோம். 1ம் எதிரி குடியிருந்த வீட்டிற்கு அருகில் பல வீடுகள் இருந்தது. 1ம் எதிரியின் வீட்டை அடையாளம் காட்டியது யார் என்றால் ஆய்வாளர் காட்டினார். சம்பவத்திற்கு முன்பு 1ம் எதிரி யார் என்று எனக்கோ, ஆய்வாளருக்கோ தெரியாது. பொதுவாக காவல் பணியில் இருந்து அயல் பணிக்கு சென்றால் கடவு சீட்டு பயன்படுத்தப்படும். இந்த வழக்கில் கடவுச்சீட்டு பயன்படுத்தப்படவில்லை. 1ம் எதிரியிடம் பிரிண்டர் மிசின் கைப்பற்றும் பொழுது ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது– அந்த ஒப்புதல் வாக்குமூலம் கணினியில் தான் பதிவு செய்யப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலம் யாரால், எங்கு வைத்து கணினியில் பதிவு செய்யப்பட்ட என்ற விவரம் நான் கூறவில்லை.

பிரிண்ட்டிங் மிசின் எங்கு வேண்டுமானாலும் வாங்கலாம். காவல் நிலையத்தில் தான் மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றும் எதிரிகளிடமிருந்து எந்தவித பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கோ வாங்கப்பட்ட பிரிண்ட்டிங்க மிசினை இந்த வழக்கிற்காக பயன்படுத்தி 1ம் எதிரியின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கள்ள நோட்டுக்கள் எதுவும் 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை.

<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

ஸ்ரீசாய்ராம் பார்க்கிங்கில் தான் பல்சர் இருசக்கர வாகனத்தை கைப்பற்றினோம். அவ்வாறு கைப்பற்றுவதற்கு முன்பு 2ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றால் அளித்தார். ஸ்ரீசாய்ராம் பார்க்கிங்கில் பல்சர் கருப்பு நிற இருசக்கர வாகனம் கைப்பற்றவில்லை என்றும் தங்கச்சிமடம் திருமண மண்டபத்தில் 2ம் எதிரி 12.11.2019 அன்று வைத்திருந்த இருசக்கர வாகனத்துடன் தான் அவரை மண்டபம் காவல் நிலையத்திற்கு கியூ பிரிவு போலிசார் அழைத்து வந்தனர் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் மண்டபம் காவல் நிலையத்தில் தான் தயாரிக்கப்பட்டது என்றும் அவினாசி பஸ் நிறுத்தத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை கைப்பற்றியது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. .. | } | | |
| Miscellaneous | .. .. | } | | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 192/2021** | |
| Sessions | .. .. | } | | |
| | | } | Prosecution | – **PW**2 |
| Deposition of witness for | | } | Defence | – |
| | | } | Court | – |

Name : அன்பு செல்வம்

Father/Husband Name : முத்து

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.03.2024

<u>(எதிரிகள் 1 ஆஜர், 2 ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார் ஆஜர்.)</u>

முதல் விசாரணை–

நான் தங்கச்சிமடம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக தற்போது பணியில் உள்ளேன். கடந்த 12.11.2019 ம் தேதி மண்டபம் காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு மண்டபம் ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மண்டபம் பகுதியில் இந்திய கள்ளப்பணம் புலக்கத்தில் இருப்பதாக தெரியவந்து காவல் ஆய்வாளர் மாயாராஜ லெட்சுமி அவர்களுடன் நான், சார்பு ஆய்வாளர் சிராஜுதீன், காவலர் மணிகண்டன்

ஆகியோர்கள் மண்டபம் பகுதியில் ரோந்து சென்றபோது மண்டபம் சுடுகாடு அருகே உள்ள அய்யனார் கோவில் அருகே கையில் கருப்புநிற பாலிதீன் பையுடன் சந்தேகப்படும் படியாக எதிரி நின்று கொண்டு போவோர் வருவோரிடம் பேசிக் கொண்டருந்தவரை காவல் ஆய்வாளர் அழைத்தபோது போலிஸ் பார்ட்டி எங்களை கண்டு ஓட முயற்சித்தபோது சுற்றி வளைத்து பிடித்து காவல் ஆய்வாளர் விசாரித்தபோது அவர் கையில் வைத்திருந்த கருப்பு நிற பாலிதீன் பையில் இந்திய கள்ளப்பணம் இருந்தது தெரியவந்தது. அந்த நபரை விசாரித்ததில் முன்னுக்குப்பின் முரணாக பேசி அவரது பெயர் முரளிதரன் என்ற அருண் என்றும் அவரது த/பெ.சித்திரக்குமார் என்றும் வயது 27 என்றும் அவினாசி இலங்கை அகதிகள் முகாம், திருப்பூர் என்று கூறினார். அவர் இந்திய கள்ளப்பணத்தை கையில் வைத்திருந்ததை ஒப்புக்கொண்டு அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார். அங்கு தனிநபர் சாட்சிகள் இல்லாததால் சார்பு ஆய்வாளர் சிராஜுதீன் மற்றும் காவலர் மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் பதிவு செய்யப்பட்டது. காவலர் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

2ம் எதிரி தரப்பு கு.வி. ஏற்றுக்கொள்ள கோரப்பட்டு நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டது. 2ம் எதிரி கைது செய்யப்பட்ட இடத்திற்கு அருகில் டாஸ்மாக் உள்ளது என்றும் அந்த பகுதியில் டாஸ்மாக் சென்று வரும் நபர்கள் அதிகமாக நடமாட்டம் இருக்கும் என்றால் சரியல்ல. அவ்வாறு நடமாட்டம் இருக்கும் என்றும் காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சார்பு ஆய்வாளர் சிராஜுதின் மற்றும் காவலர் மணிகண்டன் ஆகியோர் மண்டபம் காவல் நிலையத்தில் என்னுடன் பணி செய்த அதிகாரிகள் தான். மண்டபம் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவல் ஆய்வாளரின் கீழ் நாங்கள் பணிபுரிபவர்கள் தான். அவர் தான் 2ம் எதிரியை கைது செய்தவர். 12.11.2019 அன்று மண்டபம் சுடுகாடு அருகே அய்யனார் கோவில் அருகே 2ம் எதிரி கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி கள்ள நோட்டுக்கள் எதுவும் வைத்திருக்கவில்லை என்றால் சரியல்ல. கியூ பிரிவு போலிசார் 2ம் எதிரியை சந்தேகத்தின் பேரில் அழைத்து வந்து தங்கச்சிமடத்தில்

உள்ள திருமண மண்டபத்தில் இருந்தவரை அழைத்து வந்து மண்டபம் காவல் நிலையத்தில் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. கியூ பிரிவு போலிசாரின் நிபந்தனையின் பேரில் தான் மண்டபம் போலிசார் 2ம் எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர் என்றால் சரியல்ல. 2ம் எதிரி 11.11.2019 அன்று தங்கச்சிமடத்தில் உள்ள திருமண மண்டபத்தில் இருந்து 2ம் எதிரி அழைத்து வரப்பட்டு 12.11.2019 ல் தான் அவரை கைது செய்யததாக வழக்கு தவறாக புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் எதிரி எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்கு ஆதரவாக காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கைது குறிப்பாணையில் 2ம் எதிரியை கைது செய்யப்பட்ட இடம் குறிக்கப்படவில்லை என்றும் பாம்பன் காவல் நிலையத்தில் வைத்திருந்ததாக குறிப்பு இருந்தது என்றால் சரியல்ல. கைப்பற்றதாக சொல்லப்படும் கள்ளப்பணம் 2ம்எதிரியிடம் கைப்பற்றப்படவில்லை என்றும் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது எந்தவிதமான கள்ளப்பணமும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில் டாஸ்மாக், இரயில்வே நிலையம் உள்ளது என்றும் எனவே காலை 11.00 மணிக்கு அப்பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.